பதிவு எண்—M 720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

246

246
3-54

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருகுலம், மாம்பாக்கம்; செய, சித்திரை; 7—5—54 தளிர்—29

## குருகுலத்தின் குறிக்கோள்:

*பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது*

### சுட்ட வடு

தீயினாற் சிறிது சுடுவதற்கும் நாவினால் சிறிது சுடுவதற்கும் எவ்வளவோ வேற்றுமையிருக்கிறது என்பது இந்தத் திருக்குறளால் விளங்குகின்றது.

தீயினால் சுடப்பட்ட புண், மேற்புறத்தில் உடம்பில் கிடக்கும். ஆனால் நாவினால் சுடப்பட்ட உறுத்தலான சொல்லோ, உள்ளே மனத்திலும் உணர்விலும் பாய்ந்து நிலைத்துவிடுகின்றது. அதனால் நாவினாற் சுடப்பட்டதை 'வடு' என்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!

உடம்பின் மேற் கிடக்கும் புண் சில நாட்களில் ஆறி, அப் புண் இருந்த அடையாளங்கூடத் தெரியாதபடி மறைந்துவிடக்கூடும், ஆனால் உறுத்தலான சொல், என்றும் அழியாதபடி வடுவாகவே நிலைத்து விடுகின்றது, உள்ளம் மறந்தாலும், அச்சொல் வடு மாறுவதில்லை.

இனிச், சுடுகின்ற வகையிலுங்கூட, இரண்டிற்கும் வேற்றுமையுண்டு. ஆறுகின்ற புண்ணைச் சுடுதல் என்பது சற்று எளிதாகத்தான் இருக்கும்; வடுவுண்டாம்படி சுடுதல், மிகவும் அழுத்தமாகவே சுடப்பட்டிருக்கும்.

பொதுவகையான வெளிப்புறத் தீ மேற்புண்ணின் சுடுகைக்குக் காரணமானால், வெகுளி முதலிய உள்ளகத் தீ உள்ளழுந்திய வடுவுக்குக் காரணமாகின்றது.

மன அழுக்குகளைப் பற்றித் திருவள்ளுவர் மற்றோரிடத்திற் கூறுகின்றபோது, அவற்றை அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் என்று நால்வகையாய்ப் பிரித்து ஒரு முறைப்படுத்திக் கூறுகின்றார். அதில் அழுக்காறு உண்டாகி அவாப் பெருகி வெகுளியாய்க் கொதித்து இன்னாச் சொல்லாய் வெளிவருகின்றது என்னும் ஒரு முறைமை தெரிகின்றது. அப்படி வெகுளி தீயாகி இன்னாத உரையாய் நாவினாற் சுட்ட வடு, உணர்வில் ஊடுருவிப் பெருந்துயர் பயந்து நிலைத்துவிடுகின்றது.

*தீயினாற் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு.*

தீயினால் சுட்ட புண்—நெருப்பினால் சுட்டப்பட்டு உண்டான புண், உள் ஆறும் – உடம்பில் இருந்தாலும் உள்ளத்தில் ஆறிவிடும்; நாவினால் சுட்ட வடு ஆறாது – ஆனால் அடக்கமில்லாத நாவிற் பிறந்த தீயசொற்களினால் உறுத்தப்பட்ட மன வருத்தமானது எக்காலத்தும் ஆறாது.

தீயினும் தீயவுரை கொடிதாதல் தேற்றினார்.

ஆறாதே என்று அதன் வினையாற் கூறினார், சான்றோர் தமது பெருந்தன்மையால் ஆற்றிக் கொள்ள முயன்றாலும், அது தன்னியல்பில் மாறாது என்றற்கு. ஏகாரம் ஆசிரியரது இரக்கத்தைப் புலப்படுத்திற்று.

விரைவில் ஆறி மாறிவிடுதல் பற்றித் தீயினாற் சுடப்பட்டதைப் 'புண்' என்றும், உள்ளம் ஒரோவொருகால் ஆறுதல் கொண்டாலும் தான் மாறாது நிலைத்துவிடுதல் பற்றி நாவினாற் சுடப்பட்டதை 'வடு' என்றும் விதந்தார்.

உறுத்துதல் பற்றிச் சுடுதற்றொழிலால் உரைக்கப்பட்டது.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**6-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—
குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| இலை | செய, சித்திரை, | தளிர் |
|---|---|---|
| 6 | 7-5-54 வெள்ளி. | 29 |

# ஆசியாவின் 'மன்றோ கொள்கை'

எழு ஆண்டுகளாகக் கடும் போர் புரிந்து விடுதலை அடைந்த அமெரிக்கக் கூட்டு நாடுகளுக்கு (U.S.A.), வட, தென் அமெரிக்க மாநிலங்களில் (கண்டங்களில்) ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடுவது தம் உரிமைக்கும் வளர்ச்சிக்கும் தீங்கு செய்யக் கூடியதாய் இருந்தது. எனவே 1823-ம் ஆண்டு, அன்றைய அமெரிக்கத் தலைவர் ஜேம்ஸ் மன்றோ இதுபற்றி ஒரு கொள்கையை வகுத்தார். அக் கொள்கையின் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

'........ஐரோப்பிய வல்லரசுகள் தம்முடைய சிக்கல்களுக்காகப் போரிட்டுக் கொண்டபோது அப் போர்களில் நாம் ஒரு நாளும் தலையிட்டதில்லை. ........ யாராவது நம்முடைய உரிமைகளை அழிக்கவோ அவற்றுக்குக் கேடு சூழவோ வரும்போதுதான் நாம் கடுஞ் சீற்றம் கொள்கிறோம். இந்த உலகத்தில் (வட, தென் அமெரிக்க மாநிலங்களில்) நடப்பவை, மற்றெங்கு நடப்பவற்றைக் காட்டிலும் நமக்கு மிகவும் நெருங்கியவை. இது இயற்கை....நம்முடைய சொந்த ஆட்சியை நாம் எவ்வளவோ குருதியைச் சிந்திப் பெற்றுள்ளோம். இதைக் காப்பதில் நாடு முழுதும் கருத்தாய் உள்ளது. ஆகவே அந்த வல்லரசுகள் தங்களுடைய முறைகளை இந்த உலகப் பாதியின் எந்தப் பகுதிக்காவது பரப்ப முயலுமானால் அது நமது அமைதிக்கும் பாதுகாப்புக்கும் கேடுசூழ்வதென்றுதான் கொள்ள வேண்டியவர்களாவோம்' வெளியிடத்து வல்லரசுகள் அமெரிக்காவில் தலையிடக் கூடாதென்பது இதன் நோக்கம். இது 'மன்றோ கொள்கை' என்று பெயர் பெற்றது.

அன்று அமெரிக்காவில் இருந்த இந்த நிலை இன்று ஆசியாவில் உள்ளது. பெரும்பாலான ஆசிய நாடுகள் அண்மையில் விடுதலை அடைந்தன. அவற்றின் வளர்ச்சிக்கு இன்று அமைதி தேவை. பெற்ற உரிமையைக் காத்துக் கொள்வது அதனினும் முதன்மை. எனவே ஈழத்தில் கூடிய தென் கிழக்கு ஆசியத் தலைமை அமைச்சர்கள் மாநாடு மேற்கூறிய 'மன்றோ கொள்கை'யை ஒத்ததொரு முடிவை வெளியிட்டது. பொது உடைமைக்காரர்களோ பொது உடைமை எதிர்ப்பாளர்களோ ஆசிய நாடுகளில் தலையிடுவதோ அவற்றிற்குப் படை [illegible] பதோ கூடா[illegible] என்[illegible] மாகத் [illegible]த்தது. இக் கொள்கை வெற்றி பெற, ஆசிய நாடுகள் இவ்விரு கூட்டங்களில் எதனோடும் சேராமல் நடுநிலைமையைக் கைக்கொள்ள வேண்டும்

இந்திய ஆட்சி, இந்த நடுநிலைக் கொள்கையைத் தக்க முறையில் கையாள்கிறதென்பது பிரெஞ்சுத் துருப்புக்களை இண்டோ-சைனாவுக்கு ஏற்றிச் செல்லும் வானூர்திகள் இந்நாட்டு வழியே செல்ல, இசைவு தராததிலிருந்து நன்கு புலனாயிற்று. இசைவு கொடுப்பது, "உரிமை அல்லது சாவு" என்ற தீர்ந்த முடிவுடன் போரிட்டு வரும் ஆசிய மக்களின் உரிமை வேட்கையை ஒடுக்க ஆசைப்படும் உளுத்துப் போன தற்போக்கு ஆட்சிக்கு உதவுவதாகும். இந்த மறுப்பு பிரெஞ்சு ஆதிக்க ஆட்சிக்கு மகிழ்ச்சிதரக் கூடியதன்று. அமெரிக்காவுக்கு இந்தியாவிடமிருந்த சிறிது நல்லெண்ணமும், இதனால் குறைந்து வருகிறது. இந்தியாவுக்குக் கொடுத்து வரும் பணவுதவியை நிறுத்தவேண்டும் அல்லது குறைக்கவேண்டும் என்று சில அமெரிக்கர் கருதுகின்றனர். இவ் விழப்புகளை எல்லாம் பொருட்படுத்தாமல், நம்மைச் சேர்ந்த, நம் அண்மையிலுள்ள ஆசிய மக்களின் விடுதலையையே பெரிதெனக் கொண்ட இந்திய ஆட்சியின் (தலைவர் திரு. நேரு அவர்களின்) முடிவைக் கண்டு இந்தியர் அனைவரும் பெருமிதங் கொள்கின்றனர்.

ஆசியாவில், மற்ற வல்லரசுகள் தலையிடக் கூடாதென்ற 'மன்றோ கொள்கை'யைத் தென் கிழக்கு ஆசியத் தலைமை அமைச்சர்கள் ஒருமுகமாக வெளியிட்டது போற்றத்தக்கது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# விழாப் பற்றிய சில விளக்கங்கள்

(முன் தொடர்ச்சி)

பல்வேறு தொண்டார்வமுடையவர்களும், சீர்திருத்த நோக்கமுடையவர்களும் இருக்கின்றனர். செல்வர்களும், நடுத்தர மக்களும், ஏனையோருமாக, வாழ்க்கைத் தரத்திலும் போக்கிலும் பல்வேறு நிலையில் உள்ளவர்களும் இருக்கின்றனர். ஆண்டில்முதியவரும் இளைஞருமாக உள்ள பலர் ஆண் பெண் ஆகிய இருபாலாரிலும் இருக்கின்றனர். இவர்களெல்லாரும் விதிப்படி தம்மை மாணவர் என்றும் அன்பர் என்றும் தம் நிலைக்கேற்பப் பதிவு செய்துகொண்டு குருகுலத்திற் சேர்ந்து சான்றாண்மை நெறியிற் பழகி வருகின்றனர்.

ஆசிரியர் இளவழகனார் அவர்களின் ஊராகிய மாம்பாக்கத்தில் இக்காலக் கல்வி முறையை ஒட்டிய ஒரு தொடக்கப் பள்ளிக்கூடம் இப்போது நடைபெற்று வருகிறது. அவ்விடத்தில் ஒரே பரப்பாக ஏறத்தாழ ஒரு நூறு ஏக்கர் நிலங்களை ஆசிரியர் குருகுலத்துக்கெனத் தம் சொந்தப் பொறுப்பில் வாங்கி வைத்திருக்கிறார். குருகுலத்தார்க்கெனத் தனி அச்சகம், ஒன்றை நிறுவி அதிலிருந்து 'முல்லைக் கொடி' என்னும் இக்கிழமை இதழையும் வெளியிட்டு வருகிறார். உணவு விடுதி ஒன்றைத் தொடங்கிச் சில பிள்ளைகளுக்கு உணவும் கொடுத்து வருகிறார். அதற்கெனக் குருகுல நிலப்பகுதியில் சிறு பயிர்ப் பண்ணையும் தாமே நடத்தி வருகிறார்.

இனி, அவ்விடத்தில் இன்னும் ஐம்பது ஏக்கர் நிலங்களை ஆசிரியர் ஒழுங்கு செய்வர். குருகுலம் திருக்குறட் செயலகமாக வளர்வது என்றும், இப்போது அங்கே நடக்கும் பள்ளி முதலியனவும் இனி, நடைபெற வேண்டும் பணிகளும் அத் திருக்குறட் செயலகத்தின் வழி நடப்பனவே என்றும் அறிதல்வேண்டும்.

ஓரளவு இவைகளுக்கான அடிப்படைகளை அமைத்துக் கொண்டு, மாம்பாக்கத்தில் 1949 ஆம் ஆண்டில் குருகுலத் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடந்தது. (விவரம் விரிக்கிற் பெருகும்) 1950 லிருந்து ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வரையறை செய்து கொண்டு அங்கே அதற்கான முயற்சிகள் செய்யப் பெற்று வருகின்றன. அவற்றில் பங்கு கொள்ளத்தக்க விருப்பமும் வசதியும் உள்ள குருகுலத்தார் அதிற் பங்கு கொள்ளலாம்.

இது நிற்க, குருகுலத்தின் சார்பில் ஆசிரியர் அவர்கள் ஒரு பணி (நிர்மாண)த் திட்டம் ஒன்றைத் தமக்கே உரிய மிக ஆழ்ந்தகன்றுயர்ந்த நுண்ணியலுக்கேற்ப நெடிது நினைந்து வகுத்திருக்கிறார்கள். அது, இரண்டு வகைப்படும். ஒன்று இருந்து செய்தல், மற்றொன்று சென்று செய்தல், இருந்து செய்தல் என்பதில் மேற் கூறிய திருக்குறட் செயலக அமைப்பு என்னும் மாம்பாக்கத் தொண்டுகள் அடங்கும். சென்று செய்தல் என்பதில் ஆங்காங்குள்ள குருகுலத்தாரைக் கொண்டு அங்கங்கே செய்யத்தக்க தொண்டுகளாகும். அவைகள் சான்றாண்மை இயக்கமாகக் குருகுலத்தார் அனைவரும் இணைந்தும் தனித்தனிக் குழுவாகவும் தனித்தும் செய்யக்கூடிய பன்னிரு பிரிவான பணிகளாகும். (அவை பற்றிய சுருக்கமான விளக்கம் பிறிதோரிடத்தில் இருக்கின்றது)

சென்னையிலுள்ள நூற்றுக்கணக்கான குருகுல அன்பர்களை ஒரு சேரக் கண்டு மகிழவும், அவர்களை இயக்கி இப் பன்னிரு பிரிவான பணிகளை இயன்ற மட்டும் செய்விக்கவும் குருகுலத்தைப் பற்றித் தக்கவர்களும் பொது மக்களும் அறியும்படி செய்யவுமே சென்னையில் குருகுல விழாவை நடத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

மாம்பாக்கத்தில் இருந்து செய்யும் பணிகளுக்கு 1950 ஆம் ஆண்டு, ஒருகால் கோள் விழா நடந்தது போலக், குருகுலத்தின் சென்று செய்யும் பணிகளுக்குக் கால்கோள்விழா என்று இச் சென்னை விழாவைக் கொள்ளலாம். நாடெங்கும் பரவலாகச் சென்று செய்ய வேண்டிய பன்னிரு பணிகளுக்கான கால்கோள் விழா, தலை நகரில் நடைபெற்றது பொருத்தமானதே அல்லவா?

இனி, குருகுலத்தின் சார்பில் நடைபெறும் பணிகளின் வளர்ச்சி காரணமாக ஏதேனும் சிறப்பு நிகழ்ச்சிகள் நிகழக்கூடுமேயல்லாமல் குருகுல விழா அடுத்தடுத்து நடக்கக் காரணமில்லை. ஐந்தாண்டுத் திட்டத்தின் நிறைவில் மாம்பாக்கத்தில் குருகுலப் பெருவிழா 1955 ஆம் ஆண்டில் நடைபெற இடமுண்டு.

# திருக்குறள் வாக்கச் சொற்பொழிவு விவர நன்றிக் குறிப்புகள்

## முதல் நாள் (19.3-54)

### பாயிரவியல்:

மயிலைத் திருவள்ளுவர் திருக்கோயிலில் மேற்படி கோயில் அறங்காவலர்கள் முன்னின்று நடத்தினர். திரு. சங்கரவடிவேல் பிள்ளை அவர்கள் (ஆணையாளர், இந்து அறநிலைக் கழகம்) தலைமையில், குருகுலச் சார்பில் 'இயற்கை வணக்கம்' அல்லது 'திருக்குறட் பாயிரத் தெளிவு' என்னும் கட்டுரை நூல் வெளியீட்டைத் திரு. வி. சங்கரன் செட்டியார் அவர்கள் வெளியிடு செய்தார். ஆசிரியர் திருக்குறளில் இன்று பாயிரம் பற்றி விளக்கினர். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் திருக்குறளின் ஒவ்வொரு இயலை விளக்கிப் பேசினர்.

## இரண்டாம் நாள் (20-3.54)

### இல்லறவியல்:

மயிலை வெள்ளீசர் திருக்கோயிலில், அத் திருக்கோயில் அறங்காவலர்களும், மயிலையிலுள்ள குருகுல மாணவர் திரு. ந. இராமலிங்கம் அவர்களும் முன்னின்று நடத்தினர். திருவாளர் நடராச நாடார் B.A.,B.L (ஓய்வு பெற்ற மாவட்ட நடுவர்) அவர்கள் தலைமை ஏற்றுத் தம் ஈடுபாடு தோன்றப் பேசி நடத்திக் கொடுத்தார்கள். குன்றக்குடி அடிகள் ஏற்பாட்டின்படி திரு. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் வாரத நிலையில், திரு. கருத்திருமன் எம். எல். ஏ. அவர்களும், ஆசிரியரும் சொற்பொழிவாற்றினர்கள்.

## மூன்றாம் நாள் (21-3.54)

### துறவறவியல்:

சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. திருவள்ளுவரகம் ப. இராமநாத பிள்ளை அவர்களும் ஆசிரியரும் துறவறவியல் பற்றிச் சிறந்த விளக்கங்களைக் கொடுத்தார்கள்.

## நான்காம் நாள் (22-3-54)

### ஊழியல்:

இராயபுரம், பனைமரத் தொட்டி முருகன் திருக் கோயிலில் இறைபணிக் கழகத்தார் முன்னின்று நடத்தினர். நிறைகுட வரவேற்பும், ஒப்பனைகளும், சிறப்பாக இருந்தன. திருவாளர் ஆ. கசபதி நாயகர் பி. ஏ., பி. எல்., எம். எல். சி. அவர்கள் தலைமையில் சைவத் திருவாளர் பூ சமாபுரி முதலியார் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். இறுதியில் ஆசிரியர் பேசினர். தலைவர், சொற்பொழிவாளர்களுக்கும் தொண்டர் சிலர்க்கும் பாலும் பழமும் சிற்றுண்டியும் வழங்கப் பட்டன.

## ஐந்தாம் நாள் (23-3-54) அரசியல்:

திருவேட்டீசர் திருக்கோயிலில், ஆறுமுகன் அடிமை குருகுல அன்பர் திரு. பி. கே. சண்முக சுந்தரம் செட்டியார் அவர்களும், குருகுல அன்பர் திரு. பி. வி. குப்புசாமி அவர்களும் ஷை திருக்கோயில் அறங்காவலர்களும் முன்னின்று சிறப்பாக நடத்தினர். மாலை 5 மணிக்கு யானைமேல் வெள்ளி அம்பாரியில் திருக்குறளை ஏற்றி ஆடவரும் மாதரும் திருமுறைப் பாராயணம் செய்துகொண்டு பின்தொடர நாதசுர முதலிய வாத்தியங்களோடும் நிறைகுடத்தோடும் ஆசிரியரை ஊர்வலமாக அழைத்து வந்து திருக்கோயிலில் வழிபாடு செய்வித்தனர். செட்டியார் அவர்கள், திருச்சுற்றில் உள்ள ஆறுமுகப் பெருமானுக்குச் சிறப்புமுறைத் திருமுழுக்கும், திருநீற்றுக் காப்பும் மலர் மயில் அலங்காரமும் செய்திருந்தார்கள். அமைச்சர் திரு. கே. எம். மாணிக்கவேலர் அவர்கள் முன்னிலையில் தினமணி துணையாசிரியர். திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி அவர்கள் தலைமையில் தமிழரசுக் கழகத் தலைவர். திரு மா. பொ. சிவஞானம் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். இறுதியில் குருகுலத்தார் பலருக்கும் பழம், பட்டி, மலர், திருநீறு வழங்கப்பெற்றன. செட்டியார் அவர்கள் இல்லத்தில் ஆசிரியருக்கும் குருகுல அன்பர் சிலர்க்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

## ஆறும் நாள் (24-3-54)

### அங்கவியல்:

சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் நடைபெற்றது. அதன் செயலாளரும் சிறந்த தமிழிளைஞருமாகிய திரு. பழநியாண்டி அவர்கள் முன்னின்று கூட்டத்தை அவ்விடத்தில் தகுதியாக நடத்தினர்கள். திரு. எஸ் இராசு செட்டியார் பி. ஏ; பி. எல்., அவர்கள் தலைமையில் ஆசிரியர் மட்டும் அங்கவியலை இனிது விளக்கி, அன்று கூட்டத்திற்கு வந்திருந்த கல்லூரி இளைஞர் பலரின் தமிழார்வத்தைத் தூண்டிவிட்டார்கள். ஆசிரியரைக்கொண்டு புறநானூறு விரிவுரையைப் பட்டிமன்றத்தில் நடத்த வேண்டும் என்னும் ஆர்வமிருப்பதாகச் செயலாளர் தெரிவித்தார்.

ஏழாம் நாள்: (25-3-54)
ஒழிபியல்:

சென்னைத் திருவருள் தவநெறி மன்றச் சார்பில் சிந்தாதிரிப் பேட்டை, ஆதிபுரீசர் திருக்கோயிலில் நடைபெற்றது. மன்றத்தார் ஆர்வத்தோடு ஏற்பாடுகளை முன்னின்று செய்திருந்தனர். ஆசிரியர் முதலியோரை மலர்மாலையிட்டு எதிர்கொண்டு அழைத்து வந்து திருக்கோயிலில் வழிபாடு செய்வித்தனர். அவர்கள் முன் ஏற்பாட்டின்படி அமைச்சர் இராசாராம் நாயுடு வாராததால், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமை தாங்கினார்கள். கலைமகள் துணையாசிரியர் திரு. செல்லமையர் அவர்கள் சுருக்க விளக்கமாக ஒழிபியல் பற்றி மிக அழகாகப் பேசினார்கள். கூட்டத்துக்கு வந்திருந்த திரு. முத்துராமலிங்கத் தேவர் எம். எல். ஏ. அவர்களும் சிறிதுநேரம் பேசினார்கள். ஆசிரியர் உரையும் வழக்கம்போல் நிகழ்ந்தது.

எட்டாம் நாள்: (26-3-54)
களவியல்

பெரியமெட்டு சன்மார்க்க சங்கச் சார்பில் அதன் தலைவர் திரு. N சுப்பாசாமி பிள்ளை அவர்களும், அவர்களின் திருத்தம்பியாரும் முன்னின்று சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். உடையவர் கோயிலில் கூட்டம் நடைபெற்றது. திருக்குறளை அழகிய சப்பரம் ஒன்றில் வைத்து ஆசிரியர், தலைவர், சொற்பொழிவாளர்களுடன் வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வந்தனர். புலவர் திரு. சக்கரபாணி நாயகர் (தமிழாசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்பள்ளி) அவர்கள் தலைமையில், புலவர் திரு. முருகவேள் பி. ஓ. எல். அவர்கள் சொற்பொழிவாற்றினர். களவியல் பற்றிச் சொற்பொழிவாளரும் பின் ஆசிரியரும் அரிய விளக்கங்களைக் கொடுத்தார்கள். தலைவரின் சிறந்தவுரையும் நிகழ்ந்தது. இறுதியில் பிள்ளையவர்கள் இல்லத்தில் ஆசிரியர் முதலியோருக்கும் குருகுலத்தார் பலருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

ஒன்பதாம் நாள் (27-3-54)
கற்பியல்

சூளை சிதம்பரேசர் திருக்கோயிலில் அக் கோயில் அறங்காவலர்கள் முன்னின்று செய்த சிறந்த ஏற்பாடுகளின்படி கூட்டம் நடைபெற்றது. மாலையில் 5-மணிக்கு மேல் யானை மேல் திருக்குறளை ஏற்றி வாத்தியங்களுடன் ஆசிரியர் முதலியோரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசச் செயலாளர் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ, அவர்கள் தலைமையில் புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார் பி. ஓ. எல். அவர்கள் (புதுக் கல்லூரி, சென்னை) சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் உரையும் நிகழ்ந்தது. இறுதியில் ஆசிரியர் முதலியோர்க்கும், குருகுலத்தார் பலருக்கும் அறங்காவலர் திரு. இராசமாணிக்க முதலியார் அவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

விழா நாள்
நன்றிக் குறிப்புகள்

ஆசிரியர் கருத்தறிந்து திரு. அருணாசல நாடார் அவர்கள் (தாமா மாவு மில், கொருக்குப்பேட்டை) ஆர்வத்தோடு முதலமைச்சர், நிதி அமைச்சர் முதலியோரைக் கண்டு இசைவு பெற்று நாள் குறிப்பிட்டுத் தூண்ட, விழா முயற்சிகள் நடைபெற்றன.

திருக்குறள் தொழும்பர் திரு. ஏ. கசபதி நாயகர் எம். எல். ஏ. அவர்கள் விழாவில் மிக்க அக்கறை காட்டிப் பலவகையில் ஊக்க மூட்டியதோடு அமைச்சர் திரு. மாணிக்கவேலர், திரு சங்கரவடிவேல்பிள்ளை முதலியோரை விழா நிகழ்ச்சிகளில் இணைத்தும்

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்
பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

தாமும் இணைந்து கொண்டும், தொடக்க நாள் கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வித்தும் தொடர்ந்து விழா நிகழ்ச்சிகளுக்கு வந்தும் சிறப்பித்தார்கள்.

நகை வாணிபர், திரு. எஸ். சுவாமி நாதய்யர் அவர்கள் திரு டி. கோவிந்தராசலு நாயுடு அவர்களையும் விழா வரவேற்புத் தலைவராகத் தம்முடன் இணைத்துக் கொண்டு மிகவும் கருத்தோடு விழாநாள் வரவேற்பு, விழாவிடத்துப் பொறுப்புகள் (மேடைவிளம்பரம், ஒலிபெருக்கி அமைப்பு, தேநீர், முதலிய) பலவற்றையும் இயன்ற அளவு சிறப்பாக ஏற்பாடு செய்ய முயன்று, உதவி, ஊக்கமூட்டினார்கள்.

சென்னை மல்லீசர் திருக்கோயில் அறங் காவலர்களும், குறிப்பாக அக்கோயில் மானேசர் திரு. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் ஏனை அதிகாரிகளும் திருக் கோயிலிடத்தை விழா நிகழ்ச்சிகளுக்கு மனமுவந்து கொடுத்து ஊக்கமூட்டியதோடு முன்னறிவிப்பின்றி அமைக்க முற்பட்ட குருகுலத்தார் கண்காட்சியையும் அங்கேயே அமைத்துக்கொள்ள இசைந்துதவினர். விழா நிகழ்ச்சிகள் சென்னையின் நடுவிடமாக உள்ள அத்திருக் கோயிலில் அமைந்ததால் குருகுலத்தார் பலருக்கும், ஏனைப்பொது மக்களுக்கும் எவ்வளவோ வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

விழாப்பற்றிய பலவகை விளம்பரங்களில் சிலவற்றையும் குருகுல அஞ்சல் உறைகளையும் சூளை பாரதி அச்சகத்தார் இலவசமாகவே அச்சிட்டுக் கொடுத்தனர்.

# ஆதரவும் வாழ்த்தும்

"பல அறிஞர்கள் ஆற்றவிருக்கும் சொற்பொழிவுகளைக் கேட்க அவா இருந்தும் இங்குள்ள வேலை மிகுதியால் விழாவுக்கு வந்து வர இயலவில்லை.

விழா சிறப்பாக நடைபெறப் பிரார்த்திக்கிறேன்".

**K. V. AL. M.** இராமநாதன் செட்டியார்,
—கொட்டையூர்.

"திருக்குறள் இன்று நாட்டில் பரவி வருகிறது. ஆனால் திருக்குறள் படித்துக்கொண்டே நேர்மையின்றி வாழ்வார் பலரும் இருக்கக் காண்கின்றேன். அத்தகையோர் கல்லாதார் அல்லர்; திருக்குறள் கற்றாரே. திருக்குறள் கற்பதைக் காட்டினும் வள்ளுவர் வற்புறுத்தியவாறு திருக்குறள் நெறியைக் கடைப்பிடிக்குமாறு இளைஞர்களுக்கு வற்புறுத்துவது நலமெனக் கருதுகிறேன்.

விழா சிறப்புற நடைபெறுவதாக!

வாழ்த்து

1. "எம்மிள வழகர் செல்வா, இனிபகல் லறத்தின் வேந்தே,
நம்மவர் குறளின் வாழ்வை நாடொறும் கொள்ளு மாறு
செம்மையாய்ச் செய்யுந் தொண்டு சிறப்புற வளர்வ தாக!
இம்மையில் தமிழர் வாழ்வும் இனிதுற ஓங்கி வாழி!
2. ஏய்ப்பதே கலையாய் ஓங்கி இருந்திடும் இந்த நாளில்
மாய்ப்பதே அறத்தை என்று யாநிலம் எண்ணும் நாளில்
தோய்ந்திட அறத்தில் மக்கள் துணையெனக் குறளைக் கொள்ள
வாய்ப்பினை அளிக்குந் தொண்டு வழிவழிச் சிறந்து வாழி!
3. திருவளர் சென்னை தன்னில் சிறப்புற நடத்தும் இந்தப்
பெருங்குறள் விளக்கத் தொண்டு பெரும்பயன் அளிப்ப தாக!
குருகுலஞ் செய்யும் தொண்டும் குவலய மதனில் ஈசன்
அருளினால் பெருகி வாழி! அருங்குறள் அறமும் வாழி!"

அ. கி. பரந்தாமனார்.
மதுரை.

"நிகழ்ச்சிகள் எல்லாம் பிரமாதமாக இருக்கின்றன.

சென்னை முதல் அமைச்சர் உயர்திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் விழாவைத் தொடங்கி வைக்கும்பொழுது விழாவின் வெற்றிக்குக் கேட்கவா வேண்டும்".

வே. ராமநாதன்
பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

"பலப்பல திருக்குறள் விளக்கச் சொற்பொழிவுகள் நடைபெற இருக்கின்றன. பேரறிஞர்கள் கலந்து கொள்ளுகிறார்கள். இதைவிடத் தமிழினத்திற்கு வேறு சிறந்த தொண்டொன்றுண்டா?

உலகம் வள்ளுவன் வகுத்த வழி வாழட்டும்! தங்கள் விழா சிறப்புடன் நடைபெறட்டும்!

யான் குருகுலத்தில் அன்பராகச் சேர விழைகின்றேன்.

சி. மகாலிங்கன்,
குண்டக்கல் தமிழ்ச் சங்கம்.

அறிஞர் பலர் நம் ஒப்புயர்வில்லாத் தமிழ் மறையின் பல பிரிவுகளைப் பொருளாகக் கொண்டு விரிவுரைகள் ஆற்றுவதைக் கண்டு அளவுபடாமகிழ்ச்சியெய்துகின்றேன். உலகமெங்கணும் கடவுள் நம்பிக்கைக்கு மாறான கொள்கைகள் தாண்டவமாடும் இக்காலத்தில் இத்தகைய அரும்பெருந் தொண்டில் ஈடுபட்டு இடைவிடாது உழைத்து வருவது பெரிதும் போற்றற்பாலது. யான் தொலைவில் இருக்கிறபடியால், இத்துணைச் சிறந்த விழாவிற் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே யென்று பெரிதும் கவல்கின்றேன்.

தமிழ்நாடு தங்கட்குத் தக்க ஊக்கமளித்து வேண்டிய பொருளுதவி செய்து தங்களைத் தமிழ்த் தொண்டுக்கு உரிய முறையில் பயன்படுத்தவில்லையேயென்று யான் நினைந்து நினைந்து வருந்திய நாட்கள் பல. செல்வம் படைத்தவர்கள் தங்களைப் போன்றார் மூலமாகச் சிறந்த நூல்களை இயற்றுவித்து உலகுக்குப் பயன்பட செய்யலாம். தாங்கள் பலவாண்டுகட்குமுன் தொடர்ந்து செய்து வந்த சிவஞானபோதச் சொற்பொழிவுகள் நூல் வடிவில்வெளிவருமெனக் காத்திருந்தேன். மக்கள் தங்கட்குத் தகுந்த உதவி செய்திருப்பார்களாயின் அதனைத் தவறாது வெளியிட்டிருப்பீர்கள். மக்கள் மறைமலையடிகளையும் அவர் வாழ்ந்த காலத்தே தக்க ஊக்கமளித்துப் பயன்படுத்தினார்கள் இல்லை. தங்களையும் பயன்படுத்துகிறார்கள் இல்லையென்பதே எனது தாழ்மையான கருத்து. செல்வம் படைத்தோர் பலர் நாட்டிடையிருப்பினும், அச் செல்வம் நயனுடையான்கட் படினன்றோ நல்ல பயனைக் கொடுக்கும்?

தாங்கள் எடுத்துக்கொண்ட தொண்டானது மேன்மேலும் நன்கு வளர்ந்து பெரும்பயன் கொடுக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகின்றேன். தமிழ் வாழ்க. சைவம் வெல்க. குருகுலம் ஓங்குக!

வே. நாகலிங்கம்,
யாழ்ப்பாணம்.

அடிப்படைத் திட்டத்துடன் அரிய பெருந் தலைவர்களைக் கொண்டு அழகிய முறையில் அமைந்துள்ளது விழா.

திருக்குறளைத் தமிழ் மறை எனச் சட்டம் தீட்டி மக்கள் ஒரே குறளியக்கத்தின் கீழ் ஒன்றுபட்டு வாழச் செய்வோர் சொற்பொழிவாளர்களேயாவர். இன்றைய பேச்சினர், திருக்குறளைப் பேசுவோராகமட்டும் இருந்து, கொள்கையில் வேறாக நடக்கின்றனர். இக்குறை குருகுலத்தால் நிறைவுபடும். எனவே இவ் விழா மிகச் சிறந்த விழாவாகும். இவ்விழாவின் பயன் மிகப் பெருகி வாழ்க. ...லவர்.

## கண்காட்சியில்

பங்குகொண்ட

### குருகுலத்தார் பட்டியல்:—

பரிசு பெற்றோர்:

1. பத்மாவதி அம்மையார்.
2. S தேவகி அம்மாள்.
3. சந்திரா & பங்கஜம்.

1. சி. இராமகிருஷ்ணன்
2. இரா. பாலசுப்பிரமணியம்
3. சிவராஜ்
4. க. ம. தங்கவேல் முதலியார்.

கலந்துகொண்டோர்:

1. சந்திரா & பங்கஜம்
2. கா. தொ. சிவகாம சுந்தரி
3. P. இராஜேஸ்வரி
4. கு. காயத்திரி.
5 R. பட்டம்மாள்.
6. கா, தொ. சந்தானலக்ஷ்மி
7. ந. இராஜசுந்தரி
8. எஸ் தேவகி அம்மாள்
9. மோ. சரஸ்வதி
10. கனகவல்லி
11. P. லோகாம்பாள்
12. சாரதாம்பாள்
13 C இராமகிருஷ்ணன்
14 இரா. பாலசுப்பிரமணியம்
15 செல்வமாணிக்கம்
16. T.S. மன்னார் செட்டியார்
17. பத்மாவதி அம்மையார்
18. தங்கவேல் முதலியார்
19. சீனிவாசன்
20. முத்துசாமி
21. சிவராஜ்
22. இராமகிருஷ்ணன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொள்கை வெற்றிபெற மற்றத் தென்கிழக்கு ஆசிய நாடுகளும் திட்டமான நடுநிலைக் கொள்கையை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

—மெய்கண்டான்.

கள் பேச்சாளர்கள் தொண்டர்கள் வாழ்க. நம் குருகுலத் தொண்டு மிகச் செழித்து வாழ்க. திருக்குறள் பரவி வாழ்க வாழ்க என ஆதி இறைவனை வணங்குகின்றேன்.

R. K. அரங்கசாமி,
இராசிபுரம்.

குருகுல விழா சிறப்பாக நடக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

A. S. அருணசலம்,
இரட்டணை.

குருகுல விழா அழைப்புக் கிடைத்து அக மிக மகிழ்கின்றேன். என் நன்றியினை ஏற்றிடுக. விழா இனிது நிறைவெய்துக!

மா. கன்னன்,
சைதாப்பேட்டை.

குருகுலம் பணியாற்ற முன்வந்துள்ளதைக் கண்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இறைவனைப் பற்றியும், திருக்குறட் கருத்துக்களைப் பற்றியும், தமிழர்கள் அறியாது மயங்கும் இக்காலத்திலே இப் பணிகள் இன்றியமையாதன.

தங்கள் குருகுலம் பல்லாண்டுகள் தொண்டாற்றுமாறு இறைவன் திருவருள் புரிவானாக!

ஆ. சண்முகசுந்தரம், பி. ஏ.
கரந்தை, தஞ்சாவூர்.

குருகுலம் ஓங்கி வாழ்க!

1. பாம்பார்த்த பரமேசர் திருவருளே துணையாகப்
பாரோ ரேத்த
மாம்பாக்கம் அதனிடையே குருகுலத்தைத் தாபித்த
வன்மை யாளர்
நாம்பார்த்து நிதமகிழும் ஆசிரியர் இளவழகர்
நாளுநர் வாழ்க!
ஆம்பாக்க மதையுதவும் குருகுலமும் உலகிடையே
ஓங்கி வாழ்க!

2. உலகிலுளார் துயரொழித்துச் சன்மார்க்க நெறிபற்றி
உய்ய வேண்டிப்
பலதுறைகள் காட்டுகின்ற திருக்குறளின் பண்பெல்லாம்
பயில வேண்டி
நல்முறையில் தாபிக்கப் பெற்ற குரு குலம்வாழ்க!
நன்கா ராய்ந்து
வலமுறுநல் வழிகாட்டும் ஆசிரியர் இளவழகர்
வாழ்க! வாழ்க!

தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை. M. A.,

## உதிர்ந்த மலர்

1. "விழாவில் 'உணர்ச்சியினிமை' நிறைந்திருக்கிறது."

—திருப்புகழ்மணி.

2. இங்கே ஆயிரக் கணக்கில் கூடியிருக்கிறார்கள்; அன்பும் ஆர்வமும் ததும்புகின்றன. சான்றோர் முன்னிலை இப் பெருமைக்குக் காரணம்!

—அமைச்சர் சி. சுப்பிரமணியம்.

3. குருகுல ஆசிரியர் திருக்குறள் பண்பாடு அமைந்தவர்; அவர்க்குச் செய்யும் எதுவும் "உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து" எனச் சிறக்கும்.

—கல்கி.

4. விழாச் சிறப்பு மிகவும் மகிழ்விக்கிறது; இளவழகனார் போன்றார் சொல் உலகத்துக்கு வேண்டும்; குருகுலத்துக்கு ஆக்கம் செய்ய வேண்டும்.

—ரா. பி. சேதுப்பிள்ளை.

5. இளவழகனார் இக்காலத் திருவள்ளுவர்!

—ச. சச்சிதானந்தம் பிள்ளை

6. ஊக்கத்தால் குருகுலம் நடைபெறுகிறது.

—தணிகை மணி

7. திருவள்ளுவர் தொடர்பு கம்பராமாயணம் முதலிய பின்னூல்களில் உண்டு.

—கோவை கருத்திருமன M L A.

8. "ஆசிரியரால் உலகுக்கு நன்மையுண்டு.

—நடராச நாடார் B. A. B. L.

9. ஏற்ற பணித்திட்டத்தைக் குருகுலம் பெற்றிருக்கிறது.

—T. செங்கல்வராய பிள்ளை

10. இவ்வளவு மக்கள் ஆக்கத்தைப் பெற்றிருக்கும் குருகுலம் மேலும் சிறப்பதாக!

—வேங்கடாச்சாரியார்,
'தினமணி' துணையாசிரியர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)